**செ. கு. எண்**: 186 **நாள்**:22.05.2012

# மாண்புமிகு தமிழக முதலமைச்சர் **செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்களின் அறிக்கை – 22.5.2012

காஞ்சிபுரம் மாவட்டம், செங்கல்பட்டு வட்டம், ஆலத்தூர் கிராமத்தைச் சேர்ந்த திரு. பாலாஜி என்பவர் 20.5.2012 அன்று தனது மனைவி திருமதி ஆனந்தவள்ளியுடன் திருக்கழுக்குன்றம் வட்டம், மணமை கிராமம், கிழக்குக் கடற்கரை சாலையில் இரு சக்கர வாகனத்தில் சென்று கொண்டிருந்த போது, புதுச்சேரியிலிருந்து சென்னைக்கு வந்து கொண்டிருந்த அரசுப் பேருந்து மோதியதில், வாகனத்தில் பின்னால் அமர்ந்து சென்ற ஆனந்தவள்ளி சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார் என்ற செய்தியை அறிந்து நான் மிகவும் துயரம் அடைந்தேன்.

இந்தச் சாலை விபத்தில் அகால மரணமடைந்த ஆனந்தவள்ளியின் குடும்பத்திற்கு எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

மேலும், இச்சாலை விபத்தில் திரு. பாலாஜி பலத்த காயமடைந்தார் என்பதை அறிந்து மிகவும் வருத்தம் அடைந்தேன். காயமடைந்து மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சைப் பெற்று வரும் இவருக்கு நல்ல முறையில் சிகிச்சை அளிக்க மருத்துவமனை அதிகாரிகளுக்கும், காஞ்சிபுரம் மாவட்ட நிருவாகத்திற்கும் நான் உத்தரவிட்டுள்ளேன். இவர் விரைவில் பூரண குணமடைய வேண்டும் என்ற என்னுடைய விருப்பத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

மேலும், இந்தத் துயரச் சம்பவத்தில் காலமான திருமதி ஆனந்தவள்ளி குடும்பத்திற்கு ஒரு லட்சம் ரூபாயும், பலத்த காயமடைந்து மருத்துவமனையில் சிகிச்சைப் பெற்று வரும் அவரது கணவர் திரு. பாலாஜிக்கு **25,000/-** ரூபாயும், முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்க நான் உத்தரவிட்டுள்ளேன்.

**ஜெ ஜெயலலிதா**
தமிழக முதலமைச்சர்

**வெளியீடு: –**
**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை.**